OS .No. 80/2016 நாள் : 21.02..2024

**DW1 குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

நான் 3,4 பிரதிவாதிகளுக்காவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வேளாங்கண்ணி முஸ்லீம் தெருவில்தான் நாங்கள் அனைவரும் வசிக்கிறோம் என்றால் சரிதான். வேளாங்கண்ணியில் நாங்கள் பூர்வீகமாக பிறந்தது முதல் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் வசிக்கும் தெருவிற்கும் ஏன் முஸ்லீம் தெரு என்று பெயர் வந்தது என்றால் அந்த தெருவில் முஸ்லீம்கள் அதிகம் வசித்து வருவதால் முஸ்லீம் தெரு என்ற பெயர் வந்தது. எங்கள் தெருவில் உள்ளவர்களுக்கு ஜாமியா மஸ்ஜீத் ஜமாத்துதான் நிர்வாக சபையாகும்., நான் மற்றும் 3,4, பிரதிவாதிகள் அதில் உறுப்பினர்களாவோம். முஸ்லீம் தெரு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரத்தை நான் ஜமாத்திற்கு தெரிவித்தேனா என்றால் இல்லை, தெருவில் உள்ளவர்களுக்கு வழக்கு பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். முஸ்லீம் தவிர பிற சமுதாய மக்கள் எங்கள் தெருவில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். வெள்ளையாறு கிழக்கு மேற்காக ஓடுகிறது என்றால் சரிதான். வெள்ளையாறுக்கு வடபுறமாக எங்கள் தெரு உள்ளது என்றால் சரிதான். முஸ்லீம் தெருவிற்கு வடக்கில் வேளாங்கண்ணி சர்ச்சுக்கு சொந்தமான இடம் மற்றும் கட்டிடம், சிலுவைபாதை உள்ளது என்றால் சரிதான். முஸ்லீம் தெருவானது காமராஜர் சாலையுடன் இணைந்து விடுகிறது என்றால் சரிதான். முஸ்லீம் தெரு என்பது கிழக்கு மேற்கு தெரு என்றால் சரிதான். காமராஜ் சாலை என்பது தெற்கு, வடக்கு சாலை என்றால் சரிதான். காமராஜர் சாலைக்கு கிழக்கில் மாதா குளம் உள்ளது, மேற்கில் வீடுகள் உள்ளது. காமராஜர் சாலை என்பது வேளாங்கண்ணிக்கு வரும் மெயின்ரோட்டில் சந்திக்கிறது என்றால் சரிதான். முஸ்லீம் தெருவிற்கு வடக்கில் சர்ச்சுக்கு சொந்தமான இடம், புனிதபாதை உள்ள நிலையில் அந்த இடத்திற்கு வடக்கில் சர்ச்சுக்கு சொந்தமான இடங்கள் பிரதான சாலை வரை உள்ளது என்றால் சரிதான். புனித பாதை வேளாங்கண்ணி சர்ச்சிலிருந்து மாதா குளம் வரை ஏற்படுத்தப்பட்ட பாதை என்றால் சரிதான். புனித பாதையின் வடக்கு, தெற்கு இரண்டு புறமும் இயேசு நாதரின் உருவ சிலைகள் சுதைகளாக வடிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மாதா குளம் செல்லும் புனித பாதையில் வேண்டிக்கொண்டு செல்பவர்கள் கையில் மெழுகுவர்த்தி ஏற்றிக்கொண்டு காலை முட்டி போட்டுக்கொண்டு பிரார்த்தனை செய்து கொண்டு செல்வார்கள் என்றால் சரிதான்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் மாலை 5.30 மணிக்கு மேல் பாதர் தலைமையில் நடந்து சென்று புனித பாதையில் மாதா குளம் வரை வழிபாடு செய்து வருவார்கள் என்றால் அது ஈஸ்டர் பண்டிகையின்போதுதான் நடக்கும். அந்த புனிய பாதையானது வடக்கிலும், தெற்கிலும் உள்ள இடத்திற்காக சற்று உயரமாக அமைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது வேளாங்கண்ணி முஸ்லீம் தெருவில் உள்ள பொதுமக்கள் சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், நாங்கள் முஸ்லீம் தெரு சார்பாக சாட்சியம் அளிக்கவில்லை, வழக்கும் நடத்தவில்லை, எங்கள் தனிப்பட்ட முறையில்தான் நாங்கள் வழக்கு நடத்துகிறோம் என்றால் சரிதான். எங்கள் மூவரைத்தவிர முஸ்லீம் தெருவைச்சேர்ந்த இதர நபர்கள் இந்த வழக்கை எதிர்கொண்டு நடத்த முன்வரவில்லை என்றால் சரிதான். எங்கள் எதிர்வழக்குரையில் நாங்கள் எங்கள் தனிப்பட்ட கருத்துக்களைத்தான் கூறியுள்ளோம் என்றும், முஸ்லீம் தெரு சார்பாக கருத்துக்கள் கூறவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட வழக்குரை, பதில் வழக்குரை மற்றும் எங்கள் எதிர்வழக்குரை ஆகியவற்றை படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். வழக்குரையில் முந்தைய வழக்கான அ.வ.எண்.200/1986, அ.வ.எண்.148/1986 மற்றும் அ.வ.எண்.79/1989 ஆகிய வழக்குகளை கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்குகளின் விவரங்கள் என்ன என்று நீதிமன்றத்தில் நகல் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அந்த வழக்குகளுக்கு நகல் மனு வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அதனால் முன்வழக்குகள் யாருக்கு எந்த மாதிரி தீர்ப்புகள் செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் முன் வழக்குகள் பற்றிய விவரங்களை தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.79/1989 வழக்கு ஜோசப்பிற்கும், சர்ச்சுக்கும் நடந்த வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அ.வ.எண்.200/1986, அ.வ.எண்.148/1986 பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.வ.எண்.79/1989 வழக்கின் ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை, அ.வ.எண்.79/1989 வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள DRO உத்தரவை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை, அது சம்மந்தமாக DRO உத்தரவை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 10.10.2017 அன்று மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்ததாக கூறியுள்ள ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது, அதனை வழக்கில்தாக்கல்

செய்ய முடியுமா என்றால் முடியும், ஆனால் அதனை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் 10.10.2017 அன்று நான் குறிப்பிட்டுள்ளவாறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக என்னிடம் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முஸ்லீம் தெருவிற்கு பக்கத்தில் அமைந்துள்ள அன்னை நகரில் தற்போது யாராவது வசிக்கிறார்களா என்றால் இல்லை. அவர்கள் எங்கு சென்றார்கள் என்றால் சர்ச்சிலிருந்து பணம் கொடுத்து அவர்களுக்கு வேறு இடம் வாங்கி கொடுத்து அவர்கள் அங்கு சென்று விட்டார்கள். தற்போது அன்னை நகர் முழுவதும் வேளாங்கண்ணி சர்ச்சின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் இல்லை. வேளாங்கண்ணி சர்ச்சை எதிர்த்து சில நபர்கள் வழக்கு நடத்தி இடையிலேயே சர்ச்சுக்கும், அவர்களுக்கும் சமாதானமாகி பணம் பெற்றுக்கொண்டு சென்று விட்டார்கள். முஸ்லீம் தெரு என்பது காமராஜர் சாலையோடு இணைக்கப்படும்போது அந்த இடத்தில் சர்ச்சுக்கு சொந்தமான இ,டங்களை ஜமாத்திற்கு விட்டுக் கொடுத்ததன் அடிப்படையில்தான் அந்த இடம் இணைக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜோசப் வழக்கு நடத்தியபோது சிலுவை பாதை அங்கு இல்லை. ஜோசப் சிலுவை பாதை சம்மந்தமாகவே வழக்கு நடத்திய விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள முஸ்லீம் தெருவிலிருந்து புனித பாதை வழியாக பேருந்து நிலையத்திற்கு செல்லும்பாதை தற்போது உள்ளதா என்றால் தற்போது அடைக்கப்பட்டு விட்டது. அதுபோல் பாதை இருந்தது என்பதற்கான ஆவணங்கள் இருந்ததா என்றால் DRO உத்தரவிற்கு முன்பாக இருந்த வருவாய் துறை உத்தரவுதான் இருந்தது. எனது எதிர்வழக்குரையில் அந்த பாதைக்கு பழமையான ஆவணங்கள் இருந்ததாக கூறியுள்ள நிலையில் அந்த ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. முஸ்லீம் தெருவிற்கும், பிரதான சாலைக்கும் இடையே இருபுறமும் பழைய சாலை தற்போது இல்லை என்றால் சரிதான். அந்த சாலைக்கு இருபுறமும் ஏற்கனவே இருந்த வீடுகள் தற்போது இல்லை என்றால் சரிதான். அந்த வீட்டை சேர்ந்தவர்கள் வீட்டை காலி செய்து கொண்டு சர்ச்சில் பணம் வாங்கிக்கொண்டு சென்று விட்டார்கள். ஏற்கனவே வெள்ளையாற்றில் ஒரு பாலத்தை அரசாங்கம் கட்டுவதற்கு சர்ச் ஆட்சேபணை செய்து பின்னர் கடற்கரை ஓரமாக அரசாங்கம் ஒரு பாலத்தை கட்டி திறந்து பயன்பாட்டிற்கு வந்துள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே நடந்த அ.வ.எண்.200/1986 முஸ்லீம் தெருவைச்

சேர்ந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் பாதை சர்ச்சுக்குதான் சொந்தம் என்றும், அதில் நடந்து செல்வதற்கு சர்ச் நிர்வாகம் எந்த இடையூறும் செய்யவில்லை என்று ஒரு சமாதான தீர்ப்பு ஏற்பட்டதற்கான ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது எதிர்வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சட்டங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முஸ்லீம் தெருவின் கிழக்கு எல்லையில் தான் அன்னை நகர் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு எல்லையில் திருவிழா சமயத்தில் சர்ச் நிர்வாகம் தற்காலிக கழிவறைகளை கட்ட ஏற்பாடு செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக 2016 ம் வருடத்தில் அந்த இடத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகளாகிய நாங்கள் கழிவறை அமைக்கக்கூடாது என்று பிரச்னை செய்தோம் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அன்னை நகரில் தற்காலிக கழிவறை கட்டக்கூடாது என்றும், அது அரசாங்க இடம் என்று கூறி துண்டு பிரசுரம் நாங்கள் வினியோகித்தோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அன்னை நகர் பொதுப்பாதை இல்லை என்றும், வேளாங்கண்ணி சர்ச் நிர்வாகம் பல நபர்களிடம் இருந்து சொத்துக்கள் வாங்கி சேர்த்து வைத்திருப்பதை அரசாங்க இடம் என்றும், அது பொதுப்பாதை என்றும் ஆட்சேபித்து வருகிறோம் என்றால் சரியல்ல. சர்சி நிர்வாகம் அவர்கள் சொத்துக்குள் தனிப்பட்ட சாலைகளை அமைக்கலாம் என்றால் சரிதான். அது மாதிரியான பாதையைதான் எம்.ஜி.ஆர் திறந்து வைத்த பாதை என்று கூறுகிறோம் என்றால் சரியல்ல. அதனால் சர்ச் நிர்வாகம் திருவிழா காலத்தில் தற்காலிக கழிவறை, பந்தல் போடுவதற்கு நாங்கள் ஆட்சேபிக்கிறோம் என்றால் அதற்கு நாங்கள் ஆட்சேபிக்கவில்லை, சாலையை அடைக்கக்கூடாது என்று தான் ஆட்சேபணை செய்கிறோம். அதனால் வாதி வழக்கில் கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**